TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**
**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**

**Part VI --- Section 2**
(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(கடித எண். த.மி.ஒ.ஆ / AD(T) /F, திருத்தம் / D 1530 /2006)**

**( அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SPR/ 9/1–5 )**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

1. ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 57ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளை குறித்துரைத்துள்ளது. இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள அந்தத் தேதியிலிருந்து 21 ஆம் மற்றும் 22 ஆம் ஒழுங்குமுறை விதிகளைத் தவிர, அனைத்தும் நடைமுறைக்கு வந்துள்ளன.
2. 21ஆம் ஒழுங்குமுறைவிதி, செயல்திறங்களை அடையத் தவறுவதற்காக உரிமம்தாரர்களால் செலுத்தப்பட வேண்டிய நஷ்டஈட்டினை வகுத்துரைக்கிறது மற்றும் 22ஆம் ஒழுங்குமுறை விதி அத்தகைய நஷ்டஈடு செலுத்துகைக்கான நடைமுறையை வகுத்துரைக்கிறது.

3. தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னுடைய செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் புதிய சூழலுக்கு ஏற்ப தன்னுடைய பணியாளர்களின் மனோ நிலை மற்றும் அணுகுமுறையையும் மாற்றுவதற்காகவும் , தம்மைத் தயார் படுத்திக் கொள்வதற்கு அதற்குத் தேவைப்படக்கூடிய காலத்தை பரிசுலனை செய்தல், இது 1 (iii) ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டுள்ளது, அரசிதழில் ஒழுகுமுறை விதி வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 1 ஆண்டிற்குப் பின்பு 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறை விதியின்படியான வகைமுறை நடைமுறைக்கு வரும். இவ்வாறாக, (21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறை விதிகளின்படியான வகைமுறைகள்) தமிழ்நாடு மின்சாரச் செயல்திறச்செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளின் 2005 செப்டம்பர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன.

4. தமிழ்நாடு மின்சார வாரியம், போதுமான அளவு பணியாளர்களும், மூலப் பொருட்களும் இல்லாமல் இயங்கி வருகிறது என்றும், ஆணையத்தினால் வகுத்துரைக்கப்பட்ட பல்வேறு செந்தரங்களைச் செயற்படுத்துவது அதற்கு மிகவும் கஷ்டம் என்பது காணப்பட்டுள்ளது என்றும் அது எடுத்துரைத்துள்ளது, அது உரிமம்தாரர் ஒழுங்குமுறை விதிகளில் வகுத்துரைக்கப்பட்ட செந்தரங்களை பூர்த்தி செய்யத் தவறும் நேர்வில் செலுத்தப்பட வேண்டிய நஷ்ஈட்டை போதியளவு பணியாளர்களும் மூலப்பொருட்களும் இல்லாமல் இருப்பதை சரி செய்யவும், பணியாளர்களின் மனநிலையையும் மாற்றவும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திப் போடலாம் என்று எடுத்துரைத்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், செயல்திறச் செந்தரங்களை அடைவதற்கு அவர்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பற்றி ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்துள்ளது .

5. ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையினைப் பரிசீலித்து மற்றும் 1ஆம் ஒழுங்குமுறைவிதியில் (iii)ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவை ஒன்பதுமதங்கள் நீட்டித்து ஒப்புதலளித்துள்ளது, தமிழ்நாடு மின்சார வாரியம், செந்தரங்கள் முதலியவற்றை அடைவதற்குரிய முக்கிய நிலை மற்றும் 2005 ஆகஸ்டு 31 அன்று அறிவிக்கை செய்யப்பட்ட, 2006 மே 31 வரை செந்தரங்களை பூர்த்தி செய்வதற்குத் தவறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய நஷ்டஈட்டை ஒத்திபோடுதல் குறித்த நடவடிக்கைத் திட்டத்தை அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு

ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறை 2006 ஜுன் 1–லிருந்து நடைமுறைக்கு வரும்.

6. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னுடைய 2006 மே 26ஆம் நாளிட்ட கடிதத்தில் தற்போது இருந்து வரும் உள்ளமைப்பு, பெரிய அளவு வளர்ச்சி சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள்,வெள்ளம், கோடைகாலமனப்பாங்கு, முதலியன, எதிர்பார்பிற்கு அப்பாலான பெரியளவு சுமை வளர்ச்சி போன்று பல்வேறு இடர்ப்பாடுகளினால் செயற்படுத்தும் முறை மேலும் இருண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி போடப்படலாம் என்று மீண்டும் ஒருமுறை கோரியுள்ளது.

7. ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கையைப் பரிசீலித்து மற்றும் 1 ஆம் ஒழுங்குமுறை விதியின் (iii) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவை ஆறு மாதங்களுக்கு நீட்டித்து ஒப்புதலளித்துள்ளது, அதன் கரணமாக 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறை முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அறிக்கை செய்யப்படும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் 2006 டிசம்பர் 1ஆம் நாளிலிருந்து நிச்சயமாக செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்கு தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும் மற்றும் 2006 மே 31ஆம் அன்று அறிவிக்கை செய்யப்பட்ட செந்தரங்களை பூர்த்தி செய்யத் தவறுவதற்கான செலுத்தப்படவேண்டிய நஷ்டஈடு வழங்குவதை 2006 நவம்பர் 30 அன்று வரை ஒத்திப் போடப்படும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு 2006 டிசம்பர் 1ஆம் நாளன்று நடைமுறைக்கு வரும்.

8. தற்போது, தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னுடைய 2006 நவம்பர் 7ஆம் நாளிட்ட கடிதத்தில் பின்வருவனவற்றை உரைத்துள்ளது : –

(1) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அனைத்து தொடக்க நிலை வகைகளில் அதிக எண்ணிக்கையிலான காலியிடங்கள் உள்ளன, அரசு கொள்கைக்கு உட்பட்டு பணியிடங்களை நிரப்புவதற்கு குறைந்தது 6 மாதங்கள் ஆகும்.

(2) மேம்பாடு / புதிய பணிகள், முதலியன, நுகர்வோருக்கு குறுக்கீடு எதுவும் இல்லாமல் பயன்படுத்தப்படக்கூடிய 110 KV / 230 KV அதன் பிறகு கிடைக்கக்கூடிய மின் தொடர் இடைவெளியின் அடிப்படையில் திட்டமிடப்பட்டவாறு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(3) புதியதாகப் போடப்பட்ட சாலைகளில் மின்தொடர்களை புதைப்பதற்காக சாலையை வெட்டுவதற்கு வெகுகாலம் ஆகும், அப்பொழுதிலிருந்து சாலையை

வெட்டுவதற்கான ஒப்புதலளிப்பு, ஓராண்டுக்கால அளவிற்குப் பின்பு மட்டுமே கொடுக்கப்படுகிறது.

(4) நிலம்கையகப்படுத்துதல், வழிவிடுதல், நீதிமன்ற வழக்கு, மின்மாற்றி மற்றும் பிற SS சாதனம் ஆகியவற்றில் பெரும் உள்ளமப்புத் தடையுள்ளது.

எனவே, செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்கான தவறுகைக்காக செலுத்தப்படவேண்டிய நஷ்டஈடு வழங்குவது குறித்து, 2006 நவம்பர் 30ஆம் நாளிலிருந்து ஓராண்டிற்கு மேல் ஒத்த போடப்படலாம்.

9. ஆணையத்தின் உத்தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியம், செயல்திறச் செந்தரங்களை அடைவதற்கு அதனால் எதிர் கொள்ளப்படும் இடர்ப்பாடுகளை விளக்கி 2006 டிசம்பர் 4 அன்று தாக்கல் செய்தல்.

10. இந்தச் சூழ்நிலையில், ஆணையத்தினால் பின்வருவன பரிசீலிக்கப்படும் : –

(a) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் கூறப்படும் இடர்ப்பாடுகள் / தடைகள் தொடர்ச்சியானவை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் அதே ஆதாரத்தின் பேரில் செந்தரங்களைப் பூர்த்தி செய்ய தவறியதற்காகச் செலுத்தப்படவேண்டிய நஷ்டஈடு வழங்குவதை ஒத்தி போடுவதற்கான கோரிக்கையினை மீண்டும் கோருதலாகாது. ஆணையம், அதனுடைய இடர்ப்பாடுகளை களைவதற்கும் மற்றும் ஒழுங்குமுறை விதியின்படி செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்கான தவறியதற்காகச் செலுத்தப்படவேண்டிய நஷ்டஈட்டை நிறைவேற்றுவதற்கும் போதுமான காலத்தினை அளித்துள்ளது.

(b) ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வெளிப்படுத்தப்பட்ட உண்மையான இடர்ப்பாடுகளைக் கணக்கில் எடுததுக் கொண்டு ஒழுங்குமுறைவிதிகளை திருத்தியும் உள்ளது. மேலும், ஆணையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் உத்தேசமாகக் கூறப்பட்ட கள இடர்ப்பாடுகளின் அடிப்படையில் 2006 டிசம்பர் 4 அன்று டைபெற்ற கூட்டத்தின் போது கொண்டு வரப்பட்ட திருததங்களைச் சேர்ப்பதற்கு கொள்கையளவில் ஒத்துக் கொண்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியம், கடிதம் மற்றும் உள்நோக்கம், ஆகிய இரண்டிலும் ஒழுங்குமுறைவிதியை நடைமுறைப்

படுத்துவதற்கு நல்ல நிலையில் இருந்து வருகிறது.

(c) மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பார்வையில் விவர அறிக்கை, போட்டி விதத்தில் / விலையில் கிடைக்க்கூடிய தரமான மற்றம் நம்பத்தகுந்த மின் திறனுடன் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒரே பொருளுடையதாக அறிந்து கொள்ளப்படும். பார்வையில் விவர அறிக்கைப்படி செய்து முடித்தலானது தரம் மற்றும் நம்பத் தகுந்த மின் திறனுக்கு அதிகாரமளிக்கிறது , சந்தேகமில்லாமல், தமிழ்நாடு மின்சார வாரியம், கடிதத்திலும், உள் நோக்கத்திலும் செயல்திறச் செந்தரங்கள் பகிர்மான வகைமுறைகள் அனைத்தையும் செயற்படுத்துவதற்கு சாத்தியமான முயற்சி ஒவ்வொன்றையும் எடுத்தல் வேண்டும்.

(d) தமிழ்நாடு மின்சார வாரியம், ஆணையத்தின் ஒப்புதல் அறிக்கைப்படி கடந்த இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளில் ஒழுகுமுறைவிதிகளில் அதனால் கூறப்பட்டதைவிட செயலகத்தின் அளவு நல்லநிலை அடைந்துள்ளது மற்றும் மிகவும் முக்கியமாக, முந்திய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் மேம்பாடு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. செயலாக்க அளவானது மிக முக்கியமான அளவுருவாகும் மற்றும் இந்தச் ழ்நிலையில தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் செய்யப்பட்ட சாதனைகள், முழுமையாக ஒழுங்குமுறைவிதியின்படி தேவையான செந்தரங்களைச் செயல்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது என்று சுட்டிக் காட்டுகிறது.

(e) பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுகுமுறைவிதிகள், அவை 2004 செப்டம்பர் 1 அன்று அறிவிக்கை செய்யப்பட்டது மற்றும் உரித்தமுடையவர்கள் அனைவரின் நலனைப் பாதுகாப்பதில் சரியான பங்கு வகிக்கும் பகிர்மான உரிமம்தாரரால் அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று காண்பது ஆணையப் பிரதான பங்கு ஆகும். எனவே, சாத்தியமானவிடத்து செயலாக்கம் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டாலன்றி ஆணையத்ன் கருத்துப்படி பகிர்மானச் செந்தரங்கள் எப்போது உண்மை ஆவதில்லை என்பது உறுதி செய்யப்படுகிறது.

(f) பிரச்சனைகள் வாரியாக விரிவாக தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களுடன் மேலேயுள்ள கூட்டங்களின் போது விவாதிக்கையில், 2007 ஜனவரி 1ஆம் நாளிலிருந்து தேவையான செந்தரங்களை பூர்த்தி செய்யத் தவறுவதற்காகச்

செலுத்தப்படவேண்டிய நஷ்டஈடு பல நேர்வுகளி நிறைவேற்றப்பட முடியும் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(g) ஒரு சில நேர்வுகளைப் பொறுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வெளிப்படுத்தப்பட்டவாறான உண்மையான கள இடர்ப்பாடுகளின் அடிப்படையில், 2007 ஜுலை 1–லிருந்து அந்தச் சில நேர்வுகளில் நிச்சயமாக செந்தரங்களைப் பூர்த்தி செய்தவற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை தயார் செய்து கொள்ளும் என்ற நிபந்தனைக் உட்பட்டு ஏழு மாதங்களுக்கு விலக்களிக்கப்பு செய்ய பரிசீலிக்கப்படலாம்.

11. மேலேயுள்ளவற்றை பரிசீலித்து ஆணையம் , –

(i) பின்வரும் மின்னிணைப்புப் பகுதிகளைப் பொறுத்தவரை, 2007 ஜனவரி 1–லிருந்து செயல்விளைவு பெறுமாறு, தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறையின்செயல்திறம் நடைமுறைக்கு வரும் : –

| | |
|---|---|
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையி. வரிசை எண். 1 | கோரிக்கையின் பேரில் மின் வழங்குவதற்குரிய கடமை –<br>(a) புதிய மின்னிணைப்பு<br>(b) கூடுதல் சுமை<br>(c) தற்காலிக மின் வழங்கல்<br>(d) மின்னிணைப்பை மாற்றுதல்<br>(e) மின்னிணைப்பை இடமாற்றம் செய்தல்<br>(f) மின் கட்டணத்தை மாற்றுதல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வரிசை எண். 2 | பட்டியலிடலிலுள்ள முறையீடுகள் |
| 21ஆம் ஒழுங்குமுறையின்விதியின் அட்டவணை வரிசை எண்.3 | மின்னளவிகளை திரும்பவும் வைத்தல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணை வரிசை எண். 6 | நுகர்வோரின் முறையீடுகளக்குப் பதிலளித்தல். |

| | | |
|---|---|---|
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வரிசை எண்.7, | | நியமனங்களைச் செய்தல் மற்றும் பேணுதல் |
| 21ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணையின் வரிசை எண். 8 | | குறைகளைக் கையாளுதல். |

ஆயினும், (கோரிக்கையின் பேரில் மின் வழங்குவதற்கான உரிமம்தாரரின் கடமைகள் 4ஆம் ஒழுங்குமுறைவிதி பொறுத்து பின்வரும் அட்டவணையின் இனங்கள் I மற்றும் II, –க்கு மட்டுமே பொருந்தத்தக்க தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்ரங்கள் ஒழுங்குமுறைவிதியின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளைச் செயற்படுத்துதல், அதாவது : –

அட்டவணை I இனம் (a) நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி எதனையும் உள்ளடக்கவில்லை.

அட்டவணை II இனம் (a) நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி மற்றும்

(ii) பின் வரும் மின்னிணைப்புப் பகுதிகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளின் 21ஆம் மற்றும் 22ஆம் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறையினைச் செயற்படுத்துதல் 30.06.2007 வரை ஒத்தி போடப்பட்டுள்ளது : –

| | | |
|---|---|---|
| 21 ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணை 4இன் வரிசை எண்.4 | : – | மின் வழங்கல் தடை |
| 21ஆம் ஒழுங்முறைவிதியின் அட்டவணை 5இன் வரிசை எண். | : – | மின்னழுத்த அலைகள் மற்றும் முறையீடுகள் |

ஆயினும், 4ஆம் ஒழுங்குமுறைவிதியைப் பொறுத்தவரை, பின்வரும் அட்டவணை I மற்றும் II –ன் இனங்களுக்கு மட்டுமே விதிவிலக்கு 30.06.2007 வரை வழங்கப்படுகிறது, அதாவது : –

அட்டவணை I இனம் (b) மின் மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றம் மேம்பாடு உட்பட

அட்டவணை I இனம் (c) மின்மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உட்பட

அட்டவணை II இனம் (b) மின்மாற்றியின் திறனை அதிகப்படுத்துதல்/ மின் மாற்றியின் திறனைக் கூடுதலாக்குதல் உட்பட

அட்டவணை II இனம் (c) புதிய மின் நிலையத்தை இயக்குதல் உட்பட

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

இரா. பாலசுப்பிரமணியன்
**செயலாளர்**